# முருக பக்தர் - அருணகிரியார்

**முனைவர். மா. முத்துவிஜயலட்சுமி**
இணைப்பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி, இந்தியா

***Editorial history***

**Received:** 20.09.2024
**Accepted:** 22.10.2024
**Published Online:** 01.11.2024

***Cite this article***

Muthuvijayalakshmi, M. (2024). Devotee of Lord Muruga - Arunagiri. *Journal of Advanced Research and Innovation, 1*(1), 20-23.

https://doi.org/10.5281/zenodo.19690464

CC BY SA

**ஆய்வுச் சுருக்கம்**

இறைவனின் இறையருளை வேண்டிய அன்பர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்ந்தவர் அருணகிரிநாதர் ஆவார். உலக மக்கள் உயர்ந்த வாழ்வைப் பெற வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர் முருப் பெருமாளின் பக்தராகிய (அடியாராகிய) இவர் முருகனின் திருவருளால் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுக் கூற்றிருக்கை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இப்பாடல்கள் மூலமாக இவரது பக்திச் சிறப்பு வெளிப்படுகிறது. இதனைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முருகன் ஆட்கொண்ட விதம்**

சைவ, வைணவ சமயங்கள் மூலம் பிளவுப்பட்டிருந்த தமிழ் மக்களை முருக வழிபாட்டின் மூலம் இணைக்க நினைத்தப் பெருமைக்கு உரியவராகத் திகழ்ந்தார். திருவண்ணாமலையில் பிறந்து, சிற்றின்பத்தில் திளைத்து, நோயால் பாதிப்படைந்து வருந்தும் நிலையில், தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பொழுது முருகனால் தடுத்தாட் கொள்ளப்பட்டார். இறைவன் அவரை முதன் முதலில் வயலூருக்கு வரச்சொல்லி உத்தரவிட்டார். அங்கே சென்ற பிறகு, முருகப் பெருமான் அவரைப் பாடுமாறு கூறிய பொழுது எவ்வாறு பாடுவேன் எனக் கேட்ட சமயத்தில் "முத்தைத் திருபத்தித் திருநகை" என அடி எடுத்துக் கொடுத்தவுடன் பதினெட்டு பாடல்கள் பாடிய பெருமை பெற்ற தலம் வயலூராகும். இவர் பாடிய திருப்புகழ் பாடல்கள் 1307 ஆகும். அவை அனைத்தும் முருகனின் புகழைப் பற்றிப் பாடப்பட்டதாகும்.

**முருகனின் அருள் பெற்ற தன்மை**

முருகவேளின் தனி அடியார் பெருந்தவ முனிவர் அருணகிரிநாதர் என்பது நாடெங்கும் பரவியது. கி.பி. 1450-ல் திருவண்ணாமலையை ஆட்சி செய்த பிரபுடதேவராஜன் என்னும் மன்னன் இவரிடம் அதிக அன்பும், முருகனிடம் பக்தியும் கொண்டு விளங்கினார். ஆகவே முருகவேளை தனக்குக் காட்டி அருளுமாறு வேண்டினார். உடனே அருணகிரிநாதர் தன் நெஞ்சம் உருகத் (துதித்து) வணங்கியவுடன், நொடிப் பொழுதில் கையில் வேல் விளங்க, மயில் மீது ஏறி வந்து சபையோருக்குக் காட்சி தந்து மறைந்தார். அப்பொழுது அரசவைப் புலவராக இருந்த சம்பந்தாண்டார் என்பவர் காளி தேவியை வணங்கி பல வரங்கள் பெற்றவர். மன்னனுடன் அருணகிரிநாதர் நட்போடு இருந்ததைக் கண்டு பொறாமையுடன், வாதுக்கு அழைத்து தோற்றுப் போனார். அதன்பின் ஓடி மறைந்து கொண்டார். அச்சமயம் அருணகிரிநாதர் தேவேந்திர சங்க வகுப்பைப் பாடி, தேவியை வணங்கியதால் சம்பந்தாண்டார் அழைத்த பொழுது, தேவியை வரவிடாது தடுத்தார் எனப் பெரியோர்கள் கூறுவர்.

சுவாமி மலையில் முருகவேளின் பாத தரிசனமானது அவருக்குக் கிடைத்தது. திருப்புகழில் 105 - ஆம் பாடலில், திருப்புகழை நித்தம் பாடும் அன்பை வயலூரில் பெருமான் தனக்கு அருளியதைப் பாராட்டிப் புகழ்ந்ததாகக் கூறுகின்றார். “அபகார நிந்தை” எனத் தொடங்கும் 106-ஆம் பாடலில் முருகப் பெருமான் தனக்கு ஜெபமாலை தந்த பெருமையைக் குறிப்பிட்டுள்ளார்.

**“சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே” (கந். அந்தாதி - பா 51:4)**

என்னும் பாடலில் தேவசேனையின் கலவி இன்பத்திலும், அதிக இன்பத்தை நக்கீரர் இயற்றிய “திருமுருகாற்றுப் படை” முருகவேளுக்குத் தந்தது எனத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**பழநி தலத்தின் பெருமை உணர்தல்**

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடு பழநி என்ற தலமாகும். இப்பழநியம்பதியில் இடும்பனுக்கு அருள் புரிந்த மூர்த்தி “குராவடி வேலர்” எனப்படுகின்றார். குராமலர் முருகனுக்கு உகந்த மலராகும். பழநி கொங்கு நாட்டின் திலகமாக விளங்குகிறது. கொங்கு என்பதற்கு வாசனை என்பது பொருளாகும். அவ்வாறு வாசனை கமழ்கின்ற நாட்டில் ஞானபண்டிதனாகிய முருகன் எழுந்தருளி இருக்கின்றான். இந்த பழநியம்பதி காசிக்கும் மேலான பெருமையைப் பெற்ற திருத்தலமாகும்.

உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே கவரும் தோற்றம் கொண்ட பழநிமலை அருணகிரிநாதர் கண்ணில் பட்டவுடன் மிகப் பரவசமுற்று இதுநாள் வரை பழநி என்ற தலப் பெயரையும் கூட, படித்து, வணங்காமல் போய்விட்டேனே. அது மட்டுமன்றி பழநி என்றப் பெயரைக் கூறி வணங்கியவரைக் கூட நான் தலை வணங்கவில்லையே என வருந்தினர்.

**“படிக்கின்றிலை ! பழநித் திருநாமம் ! படிப்பவர் தான்**
**முடிக்கின்றிலை ! முருகா என்கிலை ! முசியாமலிட்டு**
**மிடிக்கின்றிலை ! பரமானந்தம் மேற்கொள விம்மிவிம்மி**
**நடிக்கின்றிலை ! நெஞ்சமே! தஞ்சமேது நமக்கினியே”**

**(கந். அலங்காரம் - 75)**

எனப் பாடிக்கொண்டே பழநி நகரை அடைந்தார். திருப்புகழ் 166 - ஆம் பாடலில்,

**“உனது பழநிமலை யெனும் ஊரைச் சேவித்திறியனே”**

எனப் பாடி தனது ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

பழநி மலையின் அடிவாரத்தில் உள்ள திருவாவினன் குடியை முதலில் தரிசித்தார். அவர் காலத்தில் சேர மன்னருடைய பகுதியான கொங்கு நாட்டில் “வைகாவூர் நாடு” என்னும் பகுதியைச் சார்ந்தது இத்திருத் தலமாகும். திருப்புகழ் 110-ஆம் பாட்டில்

**“அமரர்க்கிறையே வணங்கிய பழநி திருவாவினன் குடி”**

என்பதனால் இத்தலம் இந்திரனால் வழிபாடு செய்யப்பட்டது என்பதை அறிய முடிகின்றது. இப்பகுதி சேர நாட்டைச் சேர்ந்ததால் சுந்தரமூர்த்தி நாயனாரின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனாராகிய அம் மன்னனையும், அவர் இயற்றிய திருக்கயிலாய ஞான உலாவையும் சிறப்பித்தது. இதுவே முதல் உலா நூலாகும். இதனை “ஆதி உலா” என்றும் குறிப்பிடுவர். “வஞ்சனை மிஞ்சியே” என்ற தலைப்பில் உள்ள திருப்புகழ் 111-ஆம் பாடலில்,

**“திரு ஆவினன்குடி குன்றுக ளெங்கினுமே வளர்ந்தருள் பெருமானே”**

என, திருவாவினன் குடியில் உள்ள எல்லா மலைக்குன்றுகளிலும் திருமுருகன் விளையாடுகின்றான் என்பதை உணர்த்தியுள்ளார். அருணகிரிநாதர் பழநியில் இருந்த பொழுது அவருக்கு நண்பர் இருந்தார். அவரை “கலிசை சேவகன்” என்றும், “காவேரி சேவகன்” என்றும் அழைப்பார். அவர் “வீரை” என்னும் தலத்தில் பழநி ஆண்டவருடைய திருவுருவம் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தார் என்றும் கூறுகின்றனர். இப் பழநியம்பதி நலன்களை எளிதில் தீரக்கூடிய தலமாகும். இத்திருத்தலத்திற்கு எந்நாளும் ஒன்று போல அடியார்கள் திரளாக வந்து வழிபட்டு வரம்பெறும் தன்மையினைப் பெறுகின்றனர்.

**ஐம்புலன்களை அடக்குதல்**

நாம் செய்யக்கூடிய ஒவ்வொருச் செயல்களுக்கும் ஐம்புலன்களேக் காரணமாக அமைகின்றன.

**“தினைவேந் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்**
**தினைவேத் தியங்குயிர் கூற்றிரி லூசிடுஞ் சீயுடம்பே”**

**(கந். அந்தாதி - பா. 18: 3-4)**

கந்தசாமியின் திருவடியில் அன்பையும் அறிவையும் செலுத்தியவர்கள் ஐம்புலன் உணர்ச்சியுடைய நாறிப்போகும் இவ்வுடலை ஒழித்து விடுவார்கள் எனப் பாடியுள்ளார்.

திருவகுப்பில் “பெருத்த வசன வகுப்பு” என்னும் பகுதியில் அமைந்த 13-ஆம் பாடலில்,

**“உருக்குத் திருவருள் திளைத்து மகிழ்தர**
**உளத்தொ டுரைசெயல் ஒளித்து விடுவதும்”**

என மனம், வாக்கு, மெய் இவைகளின் செயலை அடக்கவல்லது ஆறுமுகனின் அருள் தன்மையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**காக்கும் விதம் கூறல்**

ஒவ்வொரு நாளும் நம்மைக் காத்து அருளக்கூடியவன் இறைவனே ஆவான். அருணகிரியார் இயற்றிய திரு வகுப்பில் அமைந்துள்ள “சேவகன் வகுப்பு” 4-ஆம் பாடலில்,

**“அறிவொடு மதுர மொழியது குழறி**
**அலமரு பொழுதில் அழைத்தால் வருவாய்”**

எனப் பாடி, தூதர்கள் வந்து என்னை வருத்தும் பொலும், நான் உன்னை அழைக்கும் பொழுதும் வந்து உதவ வேண்டும் என முருகப் பெருமானை அழைக்கின்றார். மேலும் “சேவகன் வகுப்பு” 17-ஆம் பாடலில்,

**“இதமகிதம் விட்டுருகி இரவுபக லற்றஇடம்**
**எனதற இருக்கை புரி யோகப் புராதனனும்”**

என இன்ப துன்பங்களை விட்டு ஞான நிலையான யான், எனது அற்ற நிலையைத் தனக்கு அருளிய யோகமூர்த்தி எனக் குறிப்பிடுகின்றார்.

**“தேடிக் கொடும்படை யாவெரு நாட்டன் சிறைகளையுந்**
**தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே”**

**(கந். அந்தாதி - பா. 27: 3-4)**

இந்திரனைச் சிறையில் இருந்து விடுவித்து, சமணரிட்ட ஏட்டிலும், வாதத்திலும் பெற்றி பெற்ற குமாரக்கடவுளது துணையை உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் எனத் தன் நெஞ்சிற்குக் கூறியுள்ளார்.

**முருகனிடம் வேண்டல்**

ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பு, இறப்பு என்ற நிலை உண்டு. அவரவர் செய்யக்கூடிய பாவம் புண்ணியங்களுக்கு ஏற்ப பிறப்பு நிலை அமைகின்றது.

**“தித்தவித் தாரமுடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு**
**தித்தவித் தாரந்தனிவீ குறத்துக்கச் செவ்வனலே”**

**(கந். அந்தாதி - பா. 5: 3-4)**

செந்தூரக் குமாரக் கடவுள் தன்னுள் கருணை வெள்ளத்தை நிறைத்து நற்கதி அடையும் பொருட்டு கொடிய அக்னி போன்ற துன்பங் கொடுக்கும் பிறப்பை ஒழித்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**“தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்**
**தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்”**

**(கந். அந்தாதி - பா. 63: 1-2)**

ஐம்பொறிகளை உடைய உடல் சாம்பலாவதும், செய்த பாவத்துக்குத் தீயில் வெந்து எமனுடைய தண்டனைக்கு ஆளாவது உறுதியாகும். ஆகையால், இனிமேலாவது இவ்வுடலானது சுமை கொள்ளாமல் என் பிறப்பை ஒழித்துக் காக்க வேண்டும் என முருகப் பெருமானிடம் வேண்டுகின்றார்.

**வாழும் நிலை உணர்தல்**

வாழ்வு என்பது நாம் பிறந்து, வளர்ந்து நல்லவற்றை நாம் மட்டும் அனுபவித்து வாழ்தல் அல்ல. பிறருக்கும் நம்மால் முடிந்ததைச் செய்வதாகும்.

**"ஏற்கு மவர்க்கிட என்னின் எங்கேனும் எழுந்திருப்பார்**
**வேற்குமரற் கன்பிலாதவர் ஞான மிகவு நன்றே"**

**(கந். அலங் - 66)**

கந்தனிடம் அன்பு கொண்டவர்கள் தம்மிடம் இல்லை என்று வருபவருக்குக் கொடுத்து உதவக்கூடியப் பண்பு உடைபவர்களாகக் காணப்படுவர். அதுவே அவர்களுடைய வாழ்வின் பயனாகும் என அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு அருணகிரிநாதர் தம் பாடல்களின் மூலம் முருகன் ஆட்கொண்ட விதம், அருள்பெற்ற தன்மை, பழநி தலத்தின் பெருமை, ஐம்புலன்களை அடக்குதல், வாழும் நிலை ஆகியவற்றை நமக்கு எடுத்துரைத்து தம் பக்தித் திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1. செல்வராயன் பிள்ளை, வ. சு. (1979). அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும். சிவாலயா.
2. அருணகிரி நாத சுவாமிகள். திருவகுப்பு.
3. செல்வராயன் பிள்ளை, வ. சு. (1970). கந்தரந்தாதி. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
4. கிருபானந்த வாரியார். (2004). திருப்புகழ் விரிவுரை. குகஸ்ரீவாரியார் பதிப்பகம்.
5. நடராஜன், பி. ரா. (2011). கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி மூலமும் உரையும். சகுந்தலை நிலையம்.
6. கிருபானந்த வாரியார். (1967). திருப்புகழ். திருப்புகழமிர்தம் காரியாலயம்.